குழந்தைகளுக்கு வேதாகமம்

வழங்குபவர்

# இயேசு 5000 பேரை போஷிக்கிறார்



எழுதியவர்: Edward Hughes

சித்தரிப்பவர்: Janie Forest
Alastair Paterson

தழுவியவர்: Ruth Klassen

மொழிபெயர்ப்பாளர்: Rev. Dr. Dasan Jeyaraj

உருவாக்குபவர்: Bible for Children
www.M1914.org

©2022 Bible for Children, Inc.
உரிமம்: இந்த கதையை நகலெடுக்கவோ, அச்சிடவோ அனுமதி
உண்டு ஆனால் இதை விற்பதற்கு அனுமதி இல்லை.

அநேக மதகுருக்கள் (பரிசேயர்
என்றழைக்கப்பட்டவர்கள்) இயேசுவை
பற்றி பொய் சொன்னார்கள்.
சிலர் அவரை கொலை
செய்யப்பார்த்தார்கள்.



அவர் உண்மையிலேயே தேவனுடைய குமாரன் என்று அவர்கள் விசுவாசிக்கவில்லை.



அவர் செய்த அற்புதங்கள் தான் தேவனுடைய குமாரன் தான் என்று நிரூபித்தும் அவரை அவர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை.





ஒரு நாள், இயேசு கலிலேயாக் கடலைத் தாண்டினார். அவரை சுற்றிலும் எப்போதும் ஜனக்கூட்டம் இருந்தபடியினாலே, சற்று நேரம் வேலையிலிருந்து இடைவெளி எடுத்துக்கொள்ள நினைத்திருக்கலாம்.



ஆனால்
ஜனக்கூட்டம்
அவரைக்
கண்டுகொண்டது.
இயேசு அநேக
அற்புதங்களைச்
செய்கிறார் என்று
அவர்களுக்கு
தெரியும். அவரோடு
இருக்க அவர்கள்
விரும்பினார்கள்.



இயேசு தன்னுடைய சீஷர்களை வனாந்திரமான மலைப்பகுதிக்கு அழைத்துச்சென்றார். அங்கே அமர்ந்து போதிக்க தொடங்கினார், அநேக ஜனங்கள் மேலும் மேலும் வரத் தொடங்கினார்கள்.

இரவு உணவுக்கு
சமயமாயிற்று.
ஒருவேளை எல்லோருக்கும்
பசியாக இருந்திருக்கலாம்.



இயேசு ஜனக்கூட்டத்தைப் பார்த்தார். அவர் பிலிப்புவை பார்த்து, "இவர்கள் சாப்பிட எங்கே நாம் அப்பம் வாங்கலாம்," என்று கேட்டார். அங்கே உணவு விற்கும் கடைகள் ஒன்றுமில்லை.
இயேசு என்ன செய்ய திட்டமிட்டிருக்கிறார்?





"இந்த கூட்டத்தை போஷிப்பதற்கு நிறைய பணம் வேண்டும்" என்று பிலிப்பு இயேசுவுக்கு பதில் கொடுத்தான். இயேசு மற்றும் அவருடைய சீஷர்களிடம் அதிக பணம் ஒன்றுமில்லை.





மற்றொரு சீஷனான,
அந்திரேயா (சீமோன்
பேதுருவின் சகோதரன்)
இயேசுவிடம்
சொன்னான்: "இங்கு
ஒரு சிறு பையனிடம்
ஐந்து வாற்கோதுமை
அப்பங்களும் மற்றும்
இரண்டு மீனும் ..."

"... ஆனால் அது இவ்வளவு பேருக்கு எப்படி போதுமானது?" ஒருவேளை அந்த பையன் இயேசுவுக்கு தன்னுடைய மதிய உணவை கொடுக்க விரும்பினாலும் - இவ்வளவு பெரிய ஜனக்கூட்டத்தை அந்த சிறு பையனின் மதிய உணவைக் கொண்டு போஷிக்க முடியுமா என்று அந்திரேயாவுக்கு
தெரியவில்லை.



இயேசு சொன்னார், "ஜனங்களை உட்காரவையுங்கள்."  ஏறக்குறைய ஐந்தாயிரம் ஆண்கள் அமர்ந்தார்கள்.  ஆச்சரியம்! ஐந்து ஆயிரம்! அந்த எண்ணிக்கை அங்கிருந்த பெண்கள் மற்றும் பிள்ளைகளை சேர்க்கவில்லை.



பின்பு, இயேசு அப்பத்தையும், மீனையும் எடுத்தார். அந்த சிறு பையன் இயேசுவை நம்பியிருக்க வேண்டும். இயேசுவுக்கு எதற்கு தன்னுடைய மதிய உணவு தேவைப்பட்டதென்றோ, அல்லது இயேசு அதைக் கொண்டு என்ன செய்வாரென்றோ

அவன் அறியவில்லை.



"என்னுடைய மதிய உணவை கொடுத்துவிட்டால் நான் சாப்பிடமுடியாது," என்று அவன் நினைத்திருக்கலாம். ஆனால் அவன் அதை இயேசுவுக்குத்தானே கொடுத்திருந்தான்.



பின்பு, இயேசு விண்ணப்பம் பண்ணினார். அவர் தேவனுக்கு நன்றி செலுத்தினார். ஐந்து அப்பத்திற்க்கும் மற்றும் இரண்டு மீனுக்குமா? ஆம்! இயேசு "நன்றி" தேவனே என்று கூறி உணவை ஆசீர்வதிக்க சொன்னார்.



விண்ணப்பம் பண்ணின
பின், இயேசு அப்பத்தையும்
மீனையும் பிட்டு
சீஷர்களிடத்தில் கொடுத்தார்.
அவர்கள் ஜனங்களுக்கு
பரிமாறினார்கள்.
அப்பொழுது ஜனங்கள்
இயேசு செய்த அற்புதத்தைக்
கண்டார்கள். ஒவ்வொருவரும்
தங்களுக்கு தேவையான
அளவு சாப்பிட்டார்கள்.
ஆனாலும் அப்பங்களும்,
மீன்களும் தீர்ந்து
போகவில்லை.



எல்லோரும் சாப்பிட்ட பின், இன்னும் அநேக அப்பங்களும், மீன்களும் மீதியாக இருந்தன. "மீதியாயிருப்பவைகளை சேர்த்துவையுங்கள், ஒன்றும் வீணாக போகக்கூடாது," என்று சீஷர்களிடத்தில் சொன்னார். எல்லோரும் சாப்பிட்டு தீர்ந்த போது அந்த ஐந்து அப்பங்களிலிருந்து மீதியாக பன்னிரெண்டு கூடைகளை நிரப்பினார்கள்.



அந்த நாளிலே, சிறிய பையனின்
மதிய உணவின் மூலம் இயேசு 5000
பேருக்கும் அதிகமான பேரை
போஷித்தார். மற்றொரு சமயம்,
4000 பேரை ஏழு அப்பங்களையும்,
சில மீன்களையும் கொண்டு
போஷித்தார்.



சாதாரண மக்கள் இப்படிப்பட்ட அடையாளங்களைக் கண்டபோது, பரிசேயரைப் போல கோபப்படவில்லை. மாறாக அவர்கள் சொன்னது, "உண்மையிலே இவர் உலகத்திற்கு வரவேண்டிய தீர்க்கதரிசி." தேவனுடைய பரிசுத்த வசனத்தில் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட இரட்சகர் இயேசு தான் என்று அறிந்திருந்தார்கள்.



# இயேசு 5000 பேரை போஷிக்கிறார்

தேவனுடைய வார்த்தையாகிய
வேதாகமத்திலிருந்து ஒரு கதை

காணப்படுமிடம்

யோவான் 6

“தேவனுடைய வார்த்தை உட்பிரவேசிக்கும் போது
வெளிச்சம் கொடுக்கிறது.” சங்கீதம் 119:130

முற்றும்

இந்த வேதாகம கதைகளானது நம்மை படைத்த மற்றும் நீங்கள் அவரை அறிந்து கொள்ள வேண்டுமென்கிற அற்புதமான தேவனைப் பற்றியதாகும்.

நாம் அநேக தவறுதல்களைச் செய்திருக்கிறோம் என்று தேவனுக்குத் தெரியும். அவர் அதை பாவம் என்று கூறுகிறார். பாவத்திற்கு தண்டனையோ மரணம் ஆனால் தேவன் நம்மை அதிகமாக நேசிப்பதினாலே, தன்னுடைய சொந்த குமாரனாகிய இயேசுவை அனுப்பி, நம்முடைய பாவங்களுக்காக அவரை சிலுவையில் மரணமடையச் செய்தார். பின்பு இயேசு உயிருடன் எழும்பி பரலோக வீட்டிற்குச் சென்றார். நீங்கள் இயேசுவை விசுவாசித்து, உங்களுடைய பாவங்களுக்கு மன்னிப்பு கேட்டால் அவர் அதைச் செய்வார். அவர் இன்றே உங்களிடத்தில் வந்து உங்களில் வாசம் பண்ணுவார், நீங்களும் என்றென்றும் அவரோடு வாசம் பண்ணுவீர்கள்.

இது உண்மையானது என்று நீங்கள் நம்பினால், பின்வரும் வாக்கியங்களை தேவனிடத்தில் சொல்லலாம். பிரியமுள்ள இயேசு, நீர் தேவனென்று நான் நம்புகிறேன், எனக்காக நீர் மனிதனாக வந்து என்னுடைய பாவங்களுக்கு மரித்து, இப்போது நீர் மறுபடியும் உயிரோடிருக்கிறீர். தயவு செய்து எனக்குள்ளே வாரும், என்னுடைய பாவங்களை மன்னியும், அதினாலே இன்று ஒரு புதிய வாழ்க்கையை நான் பெற்று, ஒரு நாளில் நான் உம்மோடு என்றென்றும் இருக்க உதவி செய்யும். உமக்கு கீழ்ப்படிந்து நடக்க உதவி செய்யும். உம்முடைய பிள்ளையாக உமக்கு கீழ்ப்படிந்து நடக்க உதவி செய்யும். ஆமென்.

வேதாகமத்தை தினந்தோறும் வாசித்து தேவனிடம் பேசுங்கள் யோவான் 3:16